தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
11 MAR 1976
MADRAS

வெள்ளிக்கிழமை, 1975 நவம்பர் 7.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Arulmigu Siva Temple, Keeranur.

* 81. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the Arulmigu Siva Temple at Keeranur, Pudukkottai district, has been brought under the control of Archaeological Department;

(*b*) whether the tower of the temple is in a dilapidated condition; and

(*c*) if so, the action taken to renovate it?

கீரனூர் அருள்மிகு சிவன் திருக்கோயில்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அருள்மிகு சிவன் திருக்கோயில் தொல்பொருள் இலாக்காவின்கீழ் கொண்டுவரப்பட்டிருப்பது உண்மையா?

(இ) மேற்படி கோயிலின் திருக்கோபுரம் இடிந்துவரும் நிலையில் இருக்கிறதா?

(உ) ஆமெனில், அதனைப் புதுப்பிக்க எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.